தமிழ்நாடு சட்டப் பேரவை

———

புதன்கிழமை, 1970 டிசம்பர் 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1.வினுக்கள்–விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினுக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 81, 82, 83 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

Period of approval for school text books

* 84 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Tamil Nadu Government had decided to limit to one year only the period of approval for school text books submitted to the Text Book Committee in 1970?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

Report of Committee on untouchability

* 85 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to place a copy of the Elayaperumal Committee's report on untouchability sent to State Government by the Central Government on or about 1969–70?

THE HON. DR. (THIRUMATHI) SATYAVANIMUTHU : The report contains 431 pages and it is a priced publication. Only fifty copies of the report are available. Two copies of the report have been placed in the Assembly Library. It is not, therefore, proposed to place the report on the table of the House.

திரு. ஏ. அ. சுப்பராஜா : தலைவர் அவர்களே, இளையபெருமாள் கமிட்டி அறிக்கையை அவைமுன் வைக்க முடியாத நிலை இருந்தாலுங் கூட, சட்டசபை உறுப்பினர்களாவது ஓரளவு தெரிந்துகொள்வதற்கு கொஞ்சம் அருள்கூர்ந்து இனிமேலாவது அவர்களுக்கு அந்த அறிக்கையைக் கொடுக்க அரசுக்கு யோசனை இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அசெம்பிளி லைப்ரரியில் அந்தப் புத்தகம் வைக்கப்பட்டிருக்கிறது. தேவையான மாண்புமிகு உறுப்பினர்கள் அங்கு போய் அதுபற்றித் தெரிந்து கொள்ளலாம்.